# பாதுகாப்புத்துறையின் அதி உயர் பதவிக்கு சிவில் அதிகாரியை நியமிக்க அரசு முடிவு!


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 3 இதழ் 288
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19-11-1994


(கொழும்பு)
பாதுகாப்புத் துறையின் அதிஉயர் பதவியான பாதுகாப்புச் செயலர் பதவிக்கு சிரேஷ்ட சிவில் உத்தியோகஸ்தர் ஒருவரை நியமிக்க அரசு முடிவு செய்திருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.
மேற்படி பதவிக்கு இதுவரை இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற உயர் அதிகாரி ஒருவரே நியமிக்கப்பட்டு வந்தார்,
இப்போது இந்த முறையை மாற்றி இந்தப் பதவிக்கு சிரேஷ்ட சிவில் உத்தியோகஸ்தர் ஒருவரை நியமிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
பாதுகாப்புத் துறையிலுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன், பிராங்க் மாற்றங்கள்பற்றி தெரியாது!

### அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா

(யாழ்ப்பாணம்)
பாதுகாப்புச் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, பொலிஸ்மா அதிபர்பிராங்க்டி சில்வா ஆகியோர் வகிக்கும் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுமா இல்லையா என்பது பற்றி தன்னால் கூறமுடியாதிருப்பதாக தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நல்லெண்ணத்தை புறக்கணித்து மணலாறில் ராணுவம் தாக்குதல்

# லெப். கேணல் மல்லி வீரச்சாவு!

## தலையும் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டது

[யாழ்ப்பாணம்]
விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த நல்லெண்ணத்தை புறக்கணிக்கும் வகையில் மணலாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப். கேணல் மல்லி உட்பட இருபோராளிகளை இராணுவத்தினர் பதுங்கிருந்து தாக்கி கொன்றதுடன் மல்லியின் உடலிலிருந்து தலையை கோரமாக வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர்.

மணலாறு பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை மூன்று மணியளவில் இராணுவத்தினர் பதுங்கியிருந்துமேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் விடுதலை புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மல்லி மற்றும் ஒரு வீரவேங்கையும் வீரச்சாவடைந்தனர்.
அதிகாலை வேளையில் இருவரும் சென்றுகொண்டிருக்கையில் திடீரென இராணுவத்தினர் தாக்குதல் நடாத்திய

(3ம் பக்கம் பார்க்க)

## தலையை ஒப்படைக்குமாறு ராணுவத்திடம் கோரிக்கை!

[யாழ்ப்பாணம்[
நெடுங்கேணிப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மல்லியின் தலையை தம்மிடம் ஒப்படைக்குமாறு விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இராணுவத் தலைமைப் பீடத்திடம் கேட்டுள்ளனர்.
இவரது தலையை இராணுவத்தினர் வெட்டி தம்முடன்

(2ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நல்லெண்ணத்திற்கு அரசு தொடர்ந்து மௌனம்!

[லண்டன்]
விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட ஒருவாரகால ஒருதலைப்பட்சபோர்நிறுத்தத்திற்கு அரசிடமிருந்து எவ்வித ஆக்கபூர்வமான பதிலுமின்றி தற்போது முடிவடையும்தறுவாயிலிருப்பதாக பி. பி. ஸி.தெரிவித்தது.
இருதரப்பினரும் தொடர்ந்து ஆயுதங்களைச் சேகரிப்பதாகவும் கூறப்படுகிறது. தனக்கு கிடைத்திருக்கும் பெரும் வெற்றி தனது சமாதான

[4ம் பக்கம் பார்க்க]

## சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு நெருக்கடி!

(கொழும்பு)
இலங்கை திறைசேரியில் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றுக் குறையை சமப்படுத்துவதற்காக, நலவாழ்வுத் திட்டங்களுக்கு இலங்கை அரசு செலவிடும் பணத்தை குறைத்துக் கொள்ளவேண்டுமென்று உலகளவில் இலங்கைக்குநிதிவழங்கிவரும் நிறுவனங்கள் இலங்கை அரசிற்கு நெருக்கடி வழங்குமெனஎதிர்பார்க்கப்படுகிறது.
இதுகுறித்து உலக வங்கி, சர்வதேச நிதிநிறுவனம் ஆசிய

(4-ம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் மல்லி பல தாக்குதல்களில் பங்கேற்றவர்

(யாழ்ப்பாணம்)
வீரச்சாவு அடைந்த லெப். கேணல் மல்லி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவராவார். 1989-ல் முள்ளியவளையில் அமைந்திருந்த இந்திய இரா

(2-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் முரண்பாடு சமாதான பேச்சு தாமதம்

[கொழும்பு[
அரசு-புலிகள் நடாத்திய சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அமைச்சர்களுக்கிடையில் பலத்த கருத்து வேறுபாடுநிலவுவதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.
அமைச்சர்கள் மட்டத்தில்

(4-ம்பக்கம பார்க்க)

## ராணுவமும் போர் நிறுத்தம் செய்யவேண்டும்

]கொழும்பு]
ஜனாதிபதியாக சந்திரிக பதவியேற்ற பின்பு, விடுதலைப் புலிகள் தாமாகவே போர் நிறுத்தம் செய்துள்ளதுபோல இராணுவமும் போர் நிறுத்தம் செய்யவேண்டுமென்று

(4-ம் பக்கம் பார்க்க)

## இரகசிய முறையில் பேச்சு ஆரம்பம்?

(லண்டன்)
இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் இரகசியமான முறையில் கடுமையான திட்டங்களுடன் மீண்டும் தொடங்கக்கூடும் என்று பி. பி. ஸி. கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஹானி தெரிவித்துள்ளார்.
சமாதான முயற்சி குறித்து முன்பு நிலவிய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்களுக்குப் பதிலாக தற்போது சோர்வும் ஐயப்பாடுகளுமே காணப்படுகின்றன
சமாதான முயற்சிகளில்

(2ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

விற்பனையாகிறது

**அறிவுக் களஞ்சியம் 27**

★ 3000 பரிசுப்போட்டி
★ யந்திர நண்டுகள்
(விஞ்ஞான தொடர் கதை

(ஏ-4506)

## மாவீரர் தின ஏற்பாடுகள்

(உடுவில்)

மாவீரர் வாரத்தை வலிகாமம் கோட்டத்தில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

கிராமிய அமைப்புக்களும் வெகுஜன அமைப்புக்களும் ஏனைய பொதுஸ்தாபனங்களும் இணைந்து இவ்வாரத்தை சிறப்பாக கொண்டாட உள்ளனர்.

வீதிகள்தோறும் மாவீரர்களின் போராட்ட வரலாறுகளை சித்தரிக்கும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. வீதிகள் தோறும் சிவப்பு மஞ்சள் வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

மாவீரர்களின் புகழை விதந்துரைக்கும் வாசகங்களைக் கொண்ட பதாதைகளும் ஆங்காங்கே அமைக கப்பட்டு வருகின்றன.

### 150 அடி நீளபந்தல்

மாவீரர்களின் உருவப்படங்களை மக்கள் பார்வைக்கு வைக்கவும் மலர் அஞ்சலி செலுத்தவும் வசதியாக சுன்னாகம் நவீன சந்தைக்கு அருகாமையில் சுமார் 150 அடி நீளமான பிரமாண்டமான பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### மலர் அஞ்சலி

மாவீரர்வாரத்தில் மாவீரர்களுடையஉருவப்படங்களுக்கு மலரிட்டு அஞ்சலி செலுத்துவதற்கு சனசமூக நிலையங்கள் பாடசாலைகள் அரச அலுவலகங்கள் மற்றும் தனியார் ஸ்தாபனங்களின் முன்பாக பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தாபனங்கள் மாவீரர் வீர வணக்கக் கூட்டங்கள் கலை நிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள், கவியரங்குகள், நாடகங்கள் போன்றவற்றை நடாத்தவும், விடுதலைக கீதங்களை ஒலிபரப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (109)

### அலங்கார பந்தல்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை பிரதான வீதியில் அலங்காரப் பந்தல் ஒன்றை நிறுவியுள்ளது.

சங்கானை பலநோககுக் கூட்டுறவுச் சங்கம் மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு சங்க முன்றலில் அலங்காரப் பந்தல் ஒன்றை நிறுவியுள்ளது.

### சிரமதானம்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு சங்கானையிலுள்ள வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் அலுவலக ஊழியர்கள் பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் சங்கானை கலாசார மண்டப வளவை சிரமதான மூலம் துப்பரவு செய்துள்ளனர். (72)

# ஜனாதிபதி ஆட்சிமுறையைஒழிப்பதற்கு பல சிக்கல்களை சந்திக்க வேண்டும்

(புது டில்லி)

ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரணதுங்க, சாதாரண மனிதரைப் பொறுத்தவரையில் அமைதிக்காகப் பணியாற்ற உறுதி பூண்டிருப்பதையும் அதிகாரங்கள் குவியப் பட்ட அதிபர் பதவியை உடைத்து, முன்னைய நாடாளுமன்ற முறையை ஏற்படுத்தவும் முடிவு செய்ததையும் அவரின் வெற்றி எனக் குறிப்பிட வேண்டும்.

அதிகளவில் இரத்தக்களரி ஏற்பட்டுவரும் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆவலை திருமதி சந்திரிகா கொண்டிருப்பதைப் பாராட்ட வேண்டும்.

இதுவரை அதிபர் பதவி வகித்தவர்களில் மிகவும் இளையவரான திருமதி சந்திரிகா தலைமையில் இயங்கும் அரசின் முன் பல சவாலான பணிகள் உள்ளன. அவற்றில் முக்கியமான முதன்மையான பணி நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் அரசியலமைப்பு திருத்தப்பற்றிய திட்டங்களை வைப்பதாகும்.

இலங்கையின் நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இதுபற்றிக் குறிப்பிடுகையில்: இந்த மறு சீரமைப்புத் திட்டமானது தெரிவுக்குழுவிடம் இம்மாதம் 24ம் திகதி ஒப்படைக்கப்படும் என்றும், இதனால் இதன் பணி அடுத்த ஆண்டு ஜுலை 15க்குள் முடிக்கப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது அதிபர் ஆட்சி முறை மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக பிரதமர் ஆட்சி முறை - நாடாளுமன்றமே மக்களுக்குப் பதில் சொல்லக்கூடிய ஆட்சி முறையை ஏற்படுத்துவதே அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தமாக அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

பொ. ச. மு.வைப் பொறுத்தமட்டில் இது எளிதான பணியல்ல. திருமதி சந்திரிகாவின் உறுதிப்பாட்டை செயல்படுத்த வேண்டுமாகில் அரசியல் சாசனத் திருத்தம் அவசியம் அதறகு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் அவசியம். கருத்துக் கணிப்பிலும் இதே விகித ஆதரவு தேவை. ஆனால் இன்றைய ஆளும் கட்சியில் அத்தகைய பெரும்பான்மை இல்லை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடம் இந்தத் திட்டத்துக்கு எந்த அளவுக்கு ஆதரவு கிடைக்கும் என்பதே தற்போதைய கேள்வியாகும். ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது.

அதிபர் ஆட்சி முறையை ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அதன் தலைவராக இருந்த திரு. ஜெயவர்த்தன 1978ம் ஆண்டில் ஒரு சிறிய திருத்தத்தின்மூலம் புகுத்தினர். அதன் மூலம் பிரதமராக இருந்த அவர் அதிபராக தன்னை உயர்த்திக் கொண்டார்.

இந்த அதிபர் பதவி ஜனநாயக அரசியல் சாசன சட்டப்படி அதிக செல்வாக்கு கொண்ட பதவியாகும். இந்த ஆட்சி முறையை ஒழிக்க ஆளும் மக்கள் கூட்டணி அரசும் திருமதி சந்திரிகாவும் பிரதான எதிர்க் கட்சியுடன் சமாதானப் போக்கைக் கடைப்பிடிக்க முன்வந்தாலும் அக் கட்சிகுள் எழுந்துள்ள அதிகாரப் போட்டி வெளியுலகத்துக்கு வியப்பையே ஏற்படுத்தி விட்டது.

அதிபர் ஆட்சியை ஒழித்து பிரதமர் ஆட்சி முறையை ஏற்படுத்தும்போது தாம் பிரதமராக மீண்டும் பதவி ஏற்க இருப்பதாக சந்திரிகா தெரிவித்து இருப்பதும் அவரது தாய் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராக நியமித்திருப்பது குடும்ப ஆட்சி என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்ட வழி வகுத்துள்ளது.

(நன்றி: அகில இந்தியவானொலி)

[ம சி]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வட்டத்திற்குட்பட்ட வர்த்தகர்கள், சனசமூக நிலையங்களுக்கான மாவீரர் நாள் தொடர்பானகலந்துரையாடல் இன்று சனிககிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா பாடசாலையில் நடைபெறவுள்ளது. ரி

## இரகசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து விடுதலைப் புலிகள் விலக்கப்பட்டால் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படுவது சாத்தியமல்லவென அரசதரப்பு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ரி

## தலையை

[1ம் பக்கத் தொடர்ச்சி[

கொண்டு சென்றுள்ளதால் அதனை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்குமாறு நேற்றுக்காலை ஐ.சி.ஆர்.சி மூலம் விடுத்த வேண்டுகோளில்புலிகள் குறிப்பிட்டுள்ளனர்.

புலிகளின் இந்த வேண்டுகோளிற்கான பதில் நேற்று மாலைவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## லெப் கேணல்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

ணுவ முகாம் மீதான தாக்குதல், கிளிநொச்சி 18 ம் போர் என்ற இடத்தில் முகாம் அமைக்க முறபட்ட ஈ.என்.டி. எல். எவ். மீதான தாக்குதல், கொக்காவில், முல்லைத்தீவு, மாங்குளம், ஆனையிறவு, வண்ணன் குளம், பூநகரி போன்ற இராணுவ முகாம்களின் மீதான தாக்குதல்களில் லெப், கேணல் மல்லி சிறப்பாக பங்காற்றியவர்.

1990ம் ஆண்டு மாங்குளம் முகாமிலிருந்து மல்லாவி பக்கமாக முன்னேற முயன்ற இராணுவத்துடனான நேரடி மோதல், வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் நோக்கி முன்னேறிய இராணுவத்துடனா மோதல், சிலாபத்திலிருந்து அளம்பில் நோக்கி முன்னேறிய இராணுவத்துடனா மோதல் மற்றும் கட்டைக்காட்டிலிருந்து புலோபளை நோக்கி முன்னேற முயன்ற யாழ். தேவி இராணுவ நடவடிக்கை மீதான தாக்குதல் என பல்வேறு தாக்குதல்களிலும் இவர் சிறப்பாக பங்கேற்றுள்ளார். -ரி

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி

**மாவீரர் நினைவாலயம்**

**இறப்பு விழா**

21-11-94 திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து வணிகர்களையும், ஊழியர்களையும், பொது மக்களையும், போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்நிகழ்வில் சகல வணிகர்களும், ஊழியர்களும் கலந்து கொள்வதால் அன்றைய தினம் யாழ். நகர வணிக நிலையங்கள் யாவும் காலை 10.00 மணிக்கே திறக்கப் படும் என்பதனை சகல பொதுமக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

நன்றி, வணக்கம்.

யாழ். வணிகர் கழகம்,
21, மேல்மாடி, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

(ஏ 4507)

இளைஞர் விரும்பும் இதழ்

**கவிதை**

தற்போது விற்பனையாகிறது! (சி 1320)

இரு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும்

**மாபெரும் வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர்**

இலக்கங்களும் பெயர்களும் வருமாறு:

1ம் பரிசு 11212 சுவர்மணிக்கூடு
அசோக்குமார்
04, சோமசுந்தரம்வீதி, சுண்டுக்குளி.

2ம் பரிசு 10425 எவர்சில்வர் பொருள்கள்
க. தியாகராசா
ஸ்ரேசன் ரோட், மல்லாகம்

3ம் பரிசு 10462 T. சேட்
பா. பாமா
7/2 இரட்ணம் வீதி, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

**ஆறுதல் பரிசுகள்**

1ம் பரிசு 8424 குடை
நா, யோகேஸ்வரி
நாவலடி, அல்வாய் வடக்கு அல்வாய்

2ம் பரிசு 8485 தொப்பி/ சாப்பாட்டுப் பெட்டி
P. பரமசிவம்
நெல்லியடி கரவெட்டி

3ம் பரிசு 10494 அல்பம்
சிவஜா சிவநேசன்
அன்னசத்திரலேன், கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

4ம் பரிசு 11221 பாடசாலைப் பை
சபாரிஸ்
04, கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளி

5ம் பரிசு 10543 பிளாஸ்ரிக் வாளி
சு. குலேந்திரராஜா
சூராவத்தை, சுன்னுகம்.

6ம் பரிசு 9252 எவர்சில்வர் பேணிகள்
வ. சின்னத்தம்பி
121, திருநெல்வேலி, கோப்பாய்.

7ம் பரிசு 10474 பாடசாலைப் பை
ஆர். எஸ். ஆனந்தராசா
வட்டுக்கோட்டை கிழக்கு,
சித்தன்கேணி.

நான்காவது சீட்டிழுப்பு 1995ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று, உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள். இன்றிலிருந்து 15-12-94க்கு முன் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ்
[தனி] லிமிட்டெட்
14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (ஏ 4508)

### மணிவாக்கு

கருணையும் கபடமும் மோதும்போது கபடம் தான் முதலில் வெற்றியடைகின்றது. தர்மமும் அதர்மமும் மோதும்போதும் இதே கதைதான். இறுதி வெற்றி கருணைக்கும் தர்மத்துக்குத்தான்.

- சாண்டில்யன்

## நமது நோக்கு

### கற்பகச் சோலை

தற்போதுள்ள ஒரு கோடி பனை மரங்களின் எண்ணிக்கையை இரண்டாயிரம் ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்குடன் கற்பகச்சோலைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடகிழக்குப் பகுதியிலேயுள்ள பிரதான வளங்களில் ஒன்று பனைவளம். அந்த வளத்தினால் மக்கள் அனுபவிக்கும் நன்மைகளோ ஏராளம்.

எமது மூதாதையர், வெற்றுக் காணிகளை வீணாக்காது பனம் விதைகளை நாட்டியதால் நாம் அதன் பலனை இன்று அனுபவிக்கிறோம்.

ஆனால் - அந்த அரிய பணியை நாம் தொடர்ந்தோமா?

இதேவேளை - திறந்த பொருளாதாரக் கொள்கை எங்கும் பரவி வரும் இந்தக் காலத்தில், இறக்குமதிகளின் ஆக்கிரமிப்பு எம்மையும், எதிர்காலச் சந்ததியினரையும் வெறும் நுகர்வுச் சமுதாயமாக மாற்றப் போகின்றதா?

எமது மண்ணில் அருகிவரும் வளங்களுக்கு மாற்றீடாக, புதிய வளங்களை இனம் கண்டு வளர்ப்பதோடு, ஏற்கனவே உள்ள வளங்களை மேலும் பெருக்க வழி காணுதல் அவசியமான ஒரு பொருண்மிய நடவடிக்கையே!

சென்ற சில ஆண்டுகளில் நாட்டப்பட்ட பனம் விதைகள் முளைத்து வந்த வேளையில், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் போதியளவு எடுக்கப்படாத காரணத்தால், கால்நடைகள் போன்றவற்றால் சேதமுற்றசோகக் கதையும் வந்தது.

எனவேதான் - பண்ணை முறையில், பனை வளர்க்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதற்கென வெற்றுக் காணிகளும் இனம்காணப்பட்டு வரப்படுகின்றது.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தனித்தனியாக பனம் பண்ணைகள் அமைப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன.

வேறு பல பொது நிறுவனங்களும் இதற்கு ஆதரவு தர முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே!

இத்தகைய முயற்சிகளில் சகல தரப்பினரும் தம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

# நாட்டின் வளர்ச்சியில் வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் 20 வருடங்கள் பின் தங்கியுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்குக் - கிழக்குப் பிரதேசங்களில் 1983-ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இராணுவ வன்செயல்களால் எமது பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அனர்த்தங்களின் அழிவுகள் எல்லாவற்றையும் இப்பிரதேச மக் ள் சந்தித்துள்ளனர். இதனால் எமது மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே எமது மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு புனரமைப்புத் திட்டங்களை நல்லவகையில்தயாரிக்க வேண்டியது எமது கடமையாகும்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் என்னும் தலைப்பில் நடைபெற்ற மூன்று நாள் கருத்தரங்கில் முதல் நாள் நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய யாழ். மாவட்டப் புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் திரு. செ பத்மநாதன் தனது தலைமையுரையில் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. பத்மநாதன் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது: கடந்த பத்து வருடகாலமாக வடமாகாணத்தில் நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தியைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் போது இலங்கையில் வடக்குக்கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாவட்ட அபிவிருத்திக்காக கொண்டுவரப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் பூரணமாகச் செயல்மடுத்தப்பட்டன. ஆனால் மன்னார்; வவுனியா மாவட்டத்தில் செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் காலப்போக்கில் இடைநிறுத்தப்பட்டன.

மற்றைய மாவட்டங்களில் திட்டங்கள் தயாரிக்கும் நிலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டன.

ஒரு உத்தியோகபூர்வமற்ற மதிப்பீட்டின்படி இம்மாவட்டங்களில் நாம் இலங்கையின் வளர்ச்சியில் இருபது வருடங்கள் பின்தங்கியுள்ளதாக அறியப்படுகிறது. இப்பின்னணியில் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில் சேவைத்துறை ஆகியவற்றில் நாம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம்,

எனவே இப்பெரிய இடைவெளியை ஈடுசெய்து சிறிலங்காவின் வளர்ச்சியை நாம் அடையவேண்டுமாயின் எமது வருடாந்த வளர்ச்சி வீதத்திலும் பார்க்க இருமடங்காக இருக்கவேண்டியது அவசியமாகின்றது. இந்த அடிப்படையிலேயே எமது புனரமைப்பு அபிவிருத்தியைத் திட்டமிடவேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

(162-சி)

## பலதும் பத்தும்

### அவரது ஆர்வம்!

அது ஒரு போட்டோ பிரதி செய்யும் நிலையம். பிறப்புச்சான்றிதழ்போன்ற பல ஆவணங்களின் பிரதிகளைப் பெறப்பலர் முனைந்து கொண்டிருக்கிறார்கள்.

அங்கே ...... உயரம் குறைந்த ஒருவர் பழைய சஞ்சிகை ஒன்றை வைத்துக்கொண்டு சில பக்கங்களைப் பிரதி செய்யக் காத்துக்கொண்டு அமைதியாக நிற்கிறார்.

என்ன ஏது என்று விசாரித்தால்...... யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய சஞ்சிகையில்...வட்டு - இந்துக் கல்லூரி நிறுவுனர் அப்பலவாண நாவலர் போன்ற பழைய அறிஞர்களின் குறிப்புகள் கொண்ட கட்டுரை அது. ....!

தமிழீழத்தின். .... முன்னோடிகளின் குறிப்புக்களைத் தேடிச் சேகரிக்கிறார் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை இளம் விரிவுரையாளர். ....!

— மயூரன்

★ விடுதலைப் புலிகளின்

# போர் இ்டைநிறுத்தகாலத்தில் இராணுவத்தினர் தாக்குதல்

(மணிலா)

விடுதலைப் புலிகள் தன்னிச்சையாக அறிவித்திருக்கும் போர் இடைநிறுத்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி இராணுவம் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக தமிழ் அமைப்புகள் அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள்ளனர் என்று 'வெரித்தாஸ்' தெரிவித்துள்ளது.

மன்னார், வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் கடற்படையினர் கடந்தபுதன்கிழமை நடாத்திய தாக்குதலில் அப்பாவித் தமிழ் மீனவர்கள் நான்கு பேர் உயிரிழந்தனர்என்றும், ராணுவத்தின் இந்த நடவடிக்கைகள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தெரியுமா? என்று நாம் சந்தேகிக்கப்படுவதாகவும் அவ்அமைப்புக்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. இப்பகுதிகளில் படையினரின தாக்குதலைகள் நடந்ததை இராணுவமும் ஒப்புக்கொண்டுள்ளது.

பயணிகள் வந்த மினி பஸ் மீது கடந்த புதன் கிழமை நள்ளிரவின் பின் ஹெலிகொப்டர் சாவகச்சேரியில் வைத்து கலிபர் தாக்குதலை நடாத்தியதும் குறிப்பீடத்தக்கது

ம-சி

## இராசி பலன்

19 - 11 - 1994

சனிக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 3)

பிரதமை பி. ப. 2-38 வரை: ரோகிணி முழுவதும அமிர்தயோகம் இராகுகாலம் காலை 9-69 முதல் 10-39 வரை: சுபநேரம் மாலை 3-09 முதல் 4-39 வரை.

மேடம்: தவறான போக்கு. மனவிரக்தி பயணத்தடை.

இடபம், நண்பர் சகவாசம், சிலேடைப் பேச்சு. வருவாய் அதிகரிப்பு

மிதுனம். தொழில் கஷ்டம். குடும்ப அமைதியின்மை, வேதனை

கடகம்: சுபகாரியம்? தாயார் உதவி, தெய்வீகந் பணி.

சிங்கம்: அதிகாரிகள் பாராட்டு, மனச் சந்தோசம், விருந்து

கன்னி: விரோதிகள் துயர், பெண்பகை, அலைச்சல்

துலாம்: வசதிக் குறைவு' சகோதரி வெறுப்பு, துயரம்

விருச்சிகம்: கல்வியியல் பெருகும், பிறருக்கு உதவுதல், தெய்வீக சிந்தனை

தனுசு: உறவினர் வருகை, மனைச்கிறப்பு, கடித உறவு

மகரம்: முரண்பாடு, காரிய தாமதம், எதிர்பாராத துயர்

கும்பம்: முயற்சித் தடை, வீண்பழி, அகால உணவு

மீனம்: அவப் பெயர், தொழில் பாதிப்பு, அமைதியின்மை.

— ஜோஸ்யர்

## மாவீரர் எழுச்சிவார கூட்டங்கள் சிரமதானங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளையொட்டி இன்று 19ம் திகதிசனிக்கிழமை இடம் பெறும் நிகழ்ச்சிகள்:

### சிரமதானங்கள்

கொக்குவில்இந்துமயானம்-வீதி பாதை திருத்தல். பளைகச்சாய் வீதி வாய்க்கால் திருத்தம், அல்வாய் கிழக்கு வட்டுவத்தை வாய்க்கால் திருத்தம்.

தீவகக் கோட்டம் சங்கானை நீதவான் குடியிருப்பு, வடக்கப்பரை பூதராசி குடியிருப்பு, சித்தன்கேணி குத்தணி குடியிருப்பு துப்பரவு செய்தல்.

### கூட்டங்கள்

கொட்டடி ச. ச. நி, உரும்பிராய், வைத்தீஸ்வர ச. ச. நி, உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலடி, கந்தர்மடம் நீராவியடி ச. ச. நி கந்தர்மடம் ஞானசோதி ச. ச, நி., கட்டுடை சுபாஸ் ச. ச. நி., பண்டத்தரிப்பு ச. ச நி., சுழிபுரம் பத்திரகாளி கோவில், உடுவில் தெற்கு, சித்திவிநாயகர் கோவில், உடுவில் காந்தரூபன் ச. ச. நி' அளவெட்டி, ரோமன் கத்தோலிக்க பாடசாலை, அளவெட்டி தும்புத் தொழிற்சாலை முகாம.

தென்மராட்சிக் கோட்டம்: பளை செல்வபுரம் பாலர் பாடசாலை, கொடிகாமம் கரம்பைக்குறிச்சி செல்வா ச. ச. நி, கல்வயல். பொன்னம்மான் குடியேற்றத்திட்டம்.

தீவகக்கோட்ட சார்பில் பாணுவெட்டி குடியிருப்பு, வட்டு குடியிருப்பு ஆகிய இடங்களில் இரவு 7-30 மணிக்கு கூட்டங்களும் வீதி நாடகங்களும் இடம் பெறும்,

ம

## இன்று

(கொழும்புத்துறை)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை காரைநகர் மாணவர் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ஜீ. சி. ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு நடத்தும் கணித, விஞ்ஞான முன்னோடிப் பரீட்சை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். நாவலர் மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ளது. -154

## மாவீரர் குடும்பத்தினர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தீவகக் கோட்டத்தைச் சேர்ந்த மாவீரர் குடும்பத்தினர் தமது தற்போதைய வசிப்பிட முகவரிகளைத் தீவகக் கோட்ட அரசியல்துறை செயலகத்திலோ கோண்டாவில் யாழ் மாவட்ட மாவீரர் பணிமனையிலோ பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுகொள்ளப்படுகின்றனர்,

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994–11–19

சனி இரவு

08-01 அறிவியற் கலசம்
08-10 நிகழ்வும் பகிர்வும்
08-25 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 சித்திரம் - க. சந்திரா எழுதிய ''விடியலின் எல்லையில்''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1994–11–20

ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்சுசிள் யாவும் நிறைவுபெறும்.

### புலிகளின்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

போதே இருவரும் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைதத லெப். கேணல் மல்லியின் தலையை இராணுவத்தினர் வெட்டி எடுத்துக்கொண்டு உடலை அவ்விடத்தில் போட்டு விட்டுச் சென்றுள்ளார்கள்.

மணலாறு மாவட்டத்தில் பல வீரகாவியங்களை படைத்த லெப். கேணல் மல்லி (அமுதன் சின்னத்தம்பி பத்மநாதன் 4-ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவராவார். இவருக்கும் இவருடன் வீரச்சாவடைந்த வீரவேங்கை அருளப்பனுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகள் ஒருவாரகால போர் நிறுத்தம் அறிவித்துள்ள இவ்வேளையில் இராணுவத்தினர் மேற்கொண்ட இச் செயல் மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகுமென விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளின் ஒருவார போர் நிறுத்த காலத்தில் படையினர் மட்டக்களப்பு, மணலாறு, சாவகச்சேரிபகுதியிலும் கடற்பரப்பிலும் பல தாக்குதல்களை மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

சிரி

பணம் குவிப்பது தன் நலம்
பனை நடுவது பொது நலம்

## 21ம் நூற்றுண்டுக்கான

# பல அபிவிருத்தி திட்டங்கள்

## ஆய்வுப் பட்டறையில் இனம்காணல்

(யாழ்ப்பாணம்)

21ம் நூற்றுண்டில் தமிழீழத்தை இட்டுச் செல்வதற்கான அனைத்து துறைகளும் சார்ந்த திட்டங்கள் கடந்த மூன்று நாட்கள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற ஆய்வுப் பட்டறையில் இனம் காணப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுப் பட்டறையை அரச நிறுவனங்களும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, தமிழீழ புனர்வாழ்வுத்துறை, தமிழீழ நிர்வாக சேவையுடன் இணைந்து நடாத்தின.

நாட்டின் அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பல்துறை சார்ந்த நிபுணர்களின் கருத்துக்கள், விளக்கவுரைகள், ஆலோசனைகள் மூன்று நாள்ஆய்வுப்பட்டறையிலும் பெறப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் காலத்தில் அபிவிருத்தியானது பழைய நிலைகளில் இல்லாது 2000 ஆண்டுக்கான திட்டமாக இவை அமையும். புதிதாக மேற்கொள்ளப்படும் திட்டமானது முன்னேற்றமடைந்த நாடுகள் ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு முன்னேற்றம் கண்டுள்ளதோ அவ்வளவிற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் சாதாரண காலத்தில் எப்படி பேர்க் காலத்தில் எப்படி என்ற வகையிலும்இத் திட்டங்கள் அமையும். ஆரம்ப கட்டமான இந்த ஆய்வுட்பட்டறையில் இணங்காணப்பட்ட விடயங்கள் குறித்து ஒரு சிறப்புக்குழு தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

1995ல் இருந்து 2000மாம் ஆண்டு வரைக்குமான திட்டங்கள் பற்றி முதலில் நீடித்து நிற்கக்கூடிய அபிவிருத்தித் திட்டமாக இவை ஆராயப்பட்டுள்ளது. அயையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

## 5-ம் ஆண்டு புலமை பரீட்சையில்

# சுன்னுகம் மாணவன் 3-ம் இடம் பெற்றுர்

### கிழக்கு மாணவர் 1-ம் இடம்

[கொழும்பு]

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி பரீட்சையில் அக்கரைப்பற்று முஸ்லிம் ஆண்கள் பாடசாலையைச் சேர்ந்த அகமட் றிஸ்கி 190 புள்ளிகள் பெற்று முதலாமிடத்தையும், சுன்னுகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் கல்விபயிலும் என், யசிந்தன் 184 புள்ளிகள் பெற்று மூன்ருமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இப்பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படும் பரீட்சை பெறுபேற்று அறிக்கைகளை பாடசாலைகள் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 3 லட்சத்து 28 ஆயிரம்மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினர்கள்.

பிரபல பாடசாலைகளில் அனுமதிபெறுவதற்கு 26·016 மாணவர்கள் இந்தப் பரீட்சைகள் மூலம் தகுதி பெற்றுள்ளனர்

தமிழ்மொழிமூல பரீட்சையில் மேலும் 2ம், 3ம் இடங்கள்பெற்ற மாணவர்கள் விபரம்; எம். எம். பைசால் அக்கரைப்பற்று அல்ஹிதாய வித்திமாலயம், டி. ராஜிமா கொழும்பு திருக்குடும்ப கன்னியர்மடம் 185 புள்ளிகள் இரண்டாமிடம்.

எம், எஸ். அகமட் அஸ்கார் மாவனல்ல சாகிறு ம. வி. 184 புள்ளிகள் 3ம் இடம்.

சிங்கள மொழி மூலம் தலா 196 புள்ளிகள் வீதம்பெற்று முதலாமிடத்தைபெற்ற மாணவர்கள் விபரம் எம். எச். விஜயமன் விஜயபால ஹொறனே தாங்கியா கனிஷ்ட வித்தியாலயம்) எச் ஆர். சி. அமரசூரிய (குளியாப்பிட்டி ஆரம்ப பாடசாலை.) ரி

அமைச்சர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளையடுத்தே சமாதானப் பேச்சிக்களில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதல்சட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் அமைச்சர்கள் இப்பேச்சுக்கள் தொடர்பாக முரண்பட்டுக்கொண்டனராம் இதனுல் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை தொடர்வதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ஜனுதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயகக குமாரதுங்க பிரதமராகவிருந்தபோது வடக்கில் விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் குறித்து பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகள் மட்டத்தில் பூரணமாக விருப்பம் இருக்கவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். இ ரி

ராணுவம்

(1-ம் பக்கத்தொடர்ச்கி]

தமிழ்த்தலைவர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாக வெரித்தாஸ் தெரிவித்தது,

நாடாளுமன்றத்தில் கூட்டணி உறுப்பினரான பி. ஜோசப் பரராஜசிங்கம் அமைதியை விரும்புவதை நிரூபிக்கும் வகையில் விடுதலைப் புலிகள் ஒருவார போர் நிறுத்தத்தை தாங்களாகவே அறிவித்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. ம-ரி

### சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நிகழ்வு சம்பந்தமாக யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் தங்கள் பகுதி மாவீரர் துயிலும் இல்ல சிரமதான வேலைகள் நாளை 20ம் திகதி காலை 8 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெறவிருப்பதால் சகல விளையாட்டுக்கழக உறுப்பினர்களையும் தவறுது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது.

சர்வதேச

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வளர்ச்சி வங்கியைச் சேர்ந்த அதிகாரிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கை அரச அதிகாரிகளுடன் பேச்சுநடத்தவுள்ளனர். -வி-ரி

ஹமில்டன்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளார்.

ஜெனரல்ஹமில்டன் வனசிங்க, பராகுடி சில்வா ஆகியோர் தமது பதவிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளனரா என பத்திரிகையாளர் வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனினும் நாட்டின் பாதுகாப்புத்துறையில் மாற்றங்கள் கொண்டுவரப்படவிருப்பதை அமைச்சர் ஊர்ஜிதம் செய்தார். இ.ரி

புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளைத் தொடரும்படி மக்கள் தனக்குவழங்கிய அங்கீகாரம்என ஜனுதிபதி சந்திரிகா பகிரங்கமாக கூறிவந்தாலும் சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் தொடங்குவதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

இதேவேளை விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவிப்புக்கூப்பின் நேற்றுவரையும் இராணுவத்தினர் ஆறு தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

புலிகள் இயக்கப் போராளிகள் இக்குறிப்பிட்ட காலப் பகுதியில் தாக்குதல் நடவடிக்கை எதிலும் ஈடுபடாபோதும் இராணுவத்தினர் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞையை புறக்கணிக்கும்வகையிலே செயற்ட்டு வருகின்றனர். -ரி

### வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

[யாழ்ப்பாணம்)

மணலாறில் இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவடைந்த 2 ம் லெப். அருளப்பன் (நகுலேசபிள்ளை ஜெயக்குமார், சரவணை மேற்கு தற்போதைய முகவரி இல 7, மூத்த விநாயகர் வீதி நல்லூர்) வித்துடல் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மு. ப. 10 மணியளவில் அரியாலை சாம்சன் குடியிருப்பில் மக்கள் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவற மீண்டும் அணிவகுப்ப மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுகி இராணுவ மரியாதைகளுடன் தூயவிதைகுழியில் விதைக்கப்படும் ரி

### இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில், யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதும்,

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும் இப்போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். -வி-ரி

பாதுகாப்புத்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதி உயர் பதவிகளிலும் பாதுகாப்புக் கட்டமைப்பிலும் மாற்றம் கொண்டுவருவதற்கு ஜனுதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முடிவு செய்திருப்பதையடுத்தே பாதுகாப்புச் செயலராக சிரேஷ்ட சிவில் அதிகாரி ஒருவரை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற ஒரு இராணுவ அதிகாரிமூலம் நாட்டின் பாதுகாப்புத்துறை நிர்வகிக்கப்படுவதைவிட தொழில் ரீதியான மட்டத்தில் சிரேஷ்ட சிவில் அதிகாரி ஒருவர் மூலம் பாதுகாப்புப்படைகள் நிர்வகிக்கப்படுவதில் அரசு தீவிர அக்கறை கொண்டுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் போரில் பாவிப்பதற்கெனத் தேவைப்படும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் அவற்றை தருவிப்பதிலும் பாதுகாப்புத்துறை இதுவரை கடைப்பிடித்துவந்த முறைகள் நாட்டில் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருந்தது இங்கு கூறிப்பிடத்தக்கது எனவும் ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்தன. இ-ரி

# மரண அறிவித்தல்

### சிவகுரு நவரத்தினம்

(பத்திரிகை முகவர் திருநெல்வேலி)

கைதடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியில் வசித்த பிரபல பத்திரிகை விற்பனையாளர் சிவகுரு நவரத்தினம் (உரிமையாளர், கனகா றேடர்ஸ் திருநெல்வேலி சந்தி) 17-11-94ல் காலமாகிவிட்டார். இவர் சிவகுரு இராசம்மா அவர்களின் அன்பு மகனும் கனகம்மாவின் அருமைக் கணவரும், விநோதன், வசந்தன், கம்சனு ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, சிவலிங்கராசா, சந்தானலஷ்மி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கரப்பிள்ளை சின்னம்மாவின் அன்பு மருமகனும் கனகராசா, புஷ்பராசா, புஸ்பலீலா, யோகமலர் ஆகியோரின் மைத்துணருமாவார்.

இறுதிக் கிரிகைகள் 17-11-94 வியாழக்கிழமை பிறபகல் 4-00 மணிக்கு அன்னுரின் கைதடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊத்தலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத் தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

: மனைவி, பிள்ளைகள்.

திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.

(எ-4509)

### வீரவேங்கை

### நகுலேசபிள்ளை ஜெயக்குமார்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இல· 7 மூத்தவிநாயகர் கச்சேரி ரேட், நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவரும் யா/வைத்தீஸ்வரா வித்தியாலய பழைய மாணவருமான வீரவேங்கை நகுலேசபிள்ளை ஜெயகுமார் காலமானுர். இவர் நகுலேசபிள்ளை (ஜே. பி) நல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் திருமதி குணரெட்ணம், நந்தினி, மகேந்திரகுமார், நந்தவதனி, ஜெயமாலினி, ஆகியோரது சகோதரரும் குணரட்ணத்தின் மைத்துணரும், பிரியதர்சனி, சுதர்சன், பிரதீபா, கார்த்தீபா ஆகியோரது மாமனுரும் ஆவர். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
தந்தையார்
இ. நகுலேசபிள்ளை
(சமாதான நீதவான்)

(எ-4510)

# மரண அறிவித்தல்

### சேனுதி சண்முகநாதன்

அத்தியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர், செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சேனுதி சண்முகநாதன் (கிளி) 18ம் திகதி வெள்ளிக்கிழமை காலமானுர்.

இவர் திருமதி லீலாவதி அவர்களின் அன்புக் கணவரும் சிவராஜா, யோகராஜா, (ஆனந்தி, உரிமையாளர் சிவானந்தா கபே, நல்லூர்) இந்திராணி, றஞ்சினி, ஜெயதாஸ் (உரிமையாளர் ஜெயா பல்பொருள் வாணிபம், நல்லூர்), ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சி. இராஜமணி, திரு. மனோகரன் (லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்) திருமதி யோ. சிவனேஸ்வரி, திரு. ஸ்ரீகாந்தன் (செந்தூரன், உரிமையாளர் காவேரி மருந்தகம், கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஷர்மிலி, ஷர்மிளா, சஞ்ஜீர், சஞ்ஜித், மயூரன், செந்தூரன், அர்ச்சனு, துஷாந், நிருஜலா, ஷகிலா, சுவேனித்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 20-11-94 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகராசா (ஆனந்தி)
(மகன்)
சிவானந்தா கபே, நல்லூர்.

50/23, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-1321)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber ‡B/16336/B: